# T20 Current Affairs

## for

# TNPSC

# Feb - 2022

Towards Your Success


**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

## Table of Contents


தமிழக நிகழ்வுகள் ........ 3
இந்திய நிகழ்வுகள் ........ 6
திருவிழா ........ 7
பொருளாதாரம் ........ 8
பட்ஜெட் ........ 8
உலக நிகழ்வுகள் ........ 10
சுற்றுச்சூழல் ........ 10
அறிவியல் & தொழில்நுட்பம் ........ 12
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ........ 13
திட்டம் ........ 13
மாநாடுகள் ........ 14
பாதுகாப்பு ........ 14
கூட்டுப்பயிற்சி ........ 15
விருதுகள் ........ 15
விளையாட்டு நிகழ்வுகள் ........ 15
புள்ளிவிவரம் ........ 16
புத்தகம் ........ 16
முக்கிய தினம் ........ 17



**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirracademy.in/currentaffairs.php?ca_category=T20-T




**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# தமிழக நிகழ்வுகள்

## ❖ தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாற்றியமைப்பு

- தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக ஏ.எஸ்.குமாரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- உறுப்பினர்களாக டாக்டர் மாலதி நாராயணசாமி, ஈரோட்டைச் சேர்ந்த பி.கீதா நடராஜன், பி.சீதாபதி, எம்.எஸ்.கே.பவானிராஜேந்திரன், ஆர்.ராணி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சட்டப் பேரவை உறுப்பினர்கள் இரண்டு பேரும் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிருஷ்ணராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ. கே.சிவகாமசுந்தரி, செங்கல்பட்டு தொகுதி எம்.எல்.ஏ. எம்.வரலட்சுமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரித்து வருகிறது. இவ்வாணையத்தில் மாநில மகளிர் ஆணையத் தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் ஆவர்.

## ❖ பத்திரிகையாளர் நல வாரியம்

- பத்திரிகையாளர் நல வாரியத்துக்கு உறுப்பினர்களை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- நல வாரியத்தின் தலைவராக செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் செயல்படுவார்.

## ❖ தேவநேயர் பாவணர் பிறந்தநாள் விழா

- தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமான தேவநேயப் பாவாணரின் ("மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்") 120-ஆவது பிறந்தநாள் விழா சென்னையில் உள்ள தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்கக வளாகத்தில் நடைபெற்றது.

## ❖ கீழடியில் பாசிமணிகள், யானை தந்தத்தால் ஆன பகடை கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் தொடங்கப்பட்டுள்ள 8-ஆம் கட்ட அகழாய்வில், முதல்முறையாக பாசிமணிகள், யானை தந்தத்தினாலான செவ்வக வடிவ பகடை ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

## ❖ உ.வே.சா பிறந்தநாள்

- தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையரின் பிறந்த நாளையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அவரது உருவப் படத்துக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

## ❖ சுதந்திரப் போராட்ட வீரர் ம.சிங்காரவேலரின் பிறந்தநாள்

- சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் ம.சிங்காரவேலரின் பிறந்தநாளையொட்டி, அவரது உருவப் படத்துக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

## ❖ அஞ்சலை அம்மாள் நினைவு தினம்

- பிப்ரவரி 20, இந்திய சுதந்திர போராட்டத்தில் தென்னிந்தியாவில் பங்கேற்ற முதல் பெண்மணி அஞ்சலை அம்மாள் நினைவு தினம்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- 1921 ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி ஆவார். நிறைமாத கர்ப்பிணியாகவும், 9 வயது மகளுடனும் சிறை சென்றவர். அஞ்சலை அம்மாள் மகாத்மா காந்தியால் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி என்று அழைக்கப்பட்டவர்.

❖ **திருநங்கைகளைப் பாதுகாக்க புதிய சட்டம்**

- திருநங்கைகள் , தற்பாலின ஈர்ப்பு கொண்டவர்களை காவல்துறையினர் தேவையின்றி தொந்தரவு செய்வதைத் தடுக்க தமிழக அரசு புதிய சட்டப்பிரிவை சேர்த்துள்ளது.
- காவல்துறை அதிகாரிகளின் நடைமுறை விதிகளில் 24-சி என்ற சட்டப்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.
- திருநங்கைகள் தற்பாலின ஈர்ப்பு சமுதாயத்தினரைப் பாதுகாக்க சட்டப்பிரிவை அமல்படுத்திய முதல் மாநிலம் தமிழகம் ஆகும்.

❖ **அகரமுதலி இயக்கத்தில் தாய்மொழி நாள் விழா**

- தமிழக அரசின் சார்பில் செயல்பட்டு வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில், 'எப்பொழுதும் முப்பொழுதும் எந்தமிழே! என்னும் பொருண்மையில் உலகத் தாய்மொழி நாள் விழா நடைபெற்றது.

❖ **மின்சார வாகன சார்ஜிங் மையங்கள்**

- நாட்டில் முதன் முறையாக சென்னை- திருச்சி -மதுரை நெடுஞ்சாலையில் 10 சார்ஜிங் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது பாரத் பெட்ரோலியம் சார்பில் அமைக்கப்பட்டது.

❖ **சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நியமனம்**

- சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக முனீஸ்வர் நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார்.

❖ **விழுப்புரத்தில் ஆலிவ் ரிட்லிகளுக்கான குஞ்சு பொரிப்பகம்**

- விழுப்புரம் வனத்துறையானது, ஆமைக் கூடுகளைப் பாதுகாக்கும் அதன் பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக, மாவட்டத்தின் கடற்கரையோரத்தில், அழிந்து வரும் ஆலிவ் ரிட்லி ஆமைகளுக்கான இரண்டாவது செயற்கை குஞ்சு பொரிப்பகத்தை விரைவில் நிறுவவுள்ளது.

❖ **சீமை கருவேலத்தை அகற்றுவதற்கான திட்டம்**

- மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சீமை கருவேலம் (புரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா) மரங்களை அழிக்கும் திட்டத்தை இரண்டு வாரங்களுக்குள் உருவாக்குமாறு மாநில அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖ **தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லும் திட்டம்**

- 'தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லும்' திட்டத்தின் கீழ் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரம் உள்ளிட்ட புத்தகங்களை சென்னை புத்தகக் கண்காட்சியில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட உள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- தமிழ்நாட்டின் வளமான இலக்கிய வரலாறு மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகம் (TNTB மற்றும் ESC) மற்றும் தனியார் பதிப்பகங்களின் கூட்டு முயற்சியாகும். இத்திட்டம் 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- தி டேல் ஆஃப் ஆன்க்லெட் என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரம், சாகித்ய அகாடமி விருது பெற்ற தோப்பில் முகமது மீரானின் கதைகள், தமிழாசிரியர் எஸ்.ராமகிருஷ்ணனின் கதா விலாசம், தமிழ் சிறுகதை எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகள், முதலமைச்சரால் வெளியிடப்படும். ஹெப்சிபா ஜேசுதனின் புத்தம் வீடு நாவல் மற்றும் தலித் எழுத்தாளர்களின் சிறுகதைகள். மொழிபெயர்ப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 12 புத்தகங்களின் தொகுப்பில் இவை ஆறு புத்தகங்கள் ஆகும்.

❖ **தமிழக நகர்புற உள்ளாட்சித் தேர்தல்**

- தமிழ்நாட்டில் இருக்கும் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிப்ரவரி 19ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படவிருக்கிறது.
- 2013-ஆம் ஆண்டு தில்லி உள்ளிட்ட மாநிலத் தேர்தலில் "நோட்டா" அறிமுகம் செய்யப்பட்டது. 2013- டிசம்பர் 4-ஆம் தேதி நடைபெற்ற ஏற்காடு தேர்தலில் "நோட்டா" அறிமுகப்படுத்தப்பட்டு பெரும் எண்ணிக்கையில், அதாவது 42,000 அளவு "நோட்டா"' வாக்குகள் விழுந்தன.

❖ **நுகர்வோர் குறியீட்டு எண்: தமிழகம் முதலிடம்**

- வேளாண் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்வரிசையில் 1292 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. 869 புள்ளிகளுடன் இமாசலப் பிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது.
- ஊரகத்தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்ணின்பட்டியலில் 1278 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடத்திலும், 917 புள்ளிகளுடன் இமாச்சாலப் பிரதேசம் கடைசி இடத்திலும் உள்ளன.

❖ **சென்னை 45-வது புத்தக கண்காட்சியை முதல்வர் துவக்கம்**

- 45-வது சென்னை புத்தக கண்காட்சியை தொடங்கிவைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அதன்பின்னர் அங்கு அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கருவூலம் அரங்கை பார்வையிட்டார். பின்னர், ஐந்தாயிரம் சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை ஆற்றங்கரை தொல்பொருள் காட்சி அரங்கை முதலமைச்சர் பார்வையிட்டார்.
- கலைஞர் பொற்கிழி, பபாசி விருதுகள் ஆகியவற்றை வழங்கி, நூல்களை வெளியிட்டுப் பேசியது:
- திசைதோறும் திராவிடம்' என்ற திட்டத்தின்கீழ் தற்போது ஆறு புத்தகங்களை நான் வெளியிட்டுள்ளேன்.
- தி டேல் ஆஃப் ஆன்க்லெட் என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரம், தமிழின் தலைசிறந்த தலித் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு, சாகித்ய அகாடமி விருது பெற்ற தோப்பில் முகமது மீரான் சிறுகதைகள், 50 தமிழ்ச் சிறுகதை



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய 'கதாவிலாசம்', தமிழ்ப் புதின எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளரான ஹெப்சிபா ஜேசுதாசன் எழுதிய புத்தம் வீடு ஆகிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

| முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது 2022 | |
|---|---|
| உரைநடை பத்திரிகையாளர் | சமஸ் |
| நாடகம் | பிரசன்னா ராமசாமி |
| கவிதை கவிஞர் | ஆசைதம்பி |
| புதினம் | வெண்ணிலா |
| பிறமொழி | பால் சக்கரியா |
| ஆங்கிலம் | மீனா கந்தசாமி |

| பபாசி விருதுகள் | |
|---|---|
| சிறந்த பதிப்பாளர் விருது | மீனாட்சி சோமசுந்தரம் மற்றும் ரவி தமிழ்வாணன் |
| சிறந்த புத்தக விற்பனையாளர் விருது | பொன்னழகு |
| சிறந்த குழந்தை எழுத்தாளர் விருது | திருவை பாபு |
| சிறந்த தமிழறிஞர் விருது | தேவிரா |
| சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் | பாரதி பாஸ்கர் |
| சிறந்த சிறுவர் அறிவியல் நூல் | கு.வை பாலசுப்ரமணியன் |

# இந்திய நிகழ்வுகள்

❖ **ICRISAT டின் 50வது ஆண்டு விழா**

- அரை வறண்ட வெப்பமண்டலத்திற்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ICRISAT) 50வது ஆண்டு விழாவை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இது ஹைதராபாத்தில் உள்ள படன்சேருவில் உள்ளது.

❖ **குடியரசு தின அணிவகுப்பின் சிறந்த மாநில அலங்கார ஊர்தி**

- 2022 ஆம் ஆண்டு குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற 12 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் அலங்கார ஊர்திகள் பங்கேற்றது. இதில் சிறந்த மாநில அலங்கார ஊர்தியாக உத்தரபிரதேசத்தின் அலங்கார ஊர்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ **இந்தியாவிற்கு வெளியில் அமைக்கப்படும் முதல் ஐஐடி**

- இந்தியா, தனது முதன்மை கல்வி நிறுவனமான ஐஐடியை முதல் முறையாக வெளிநாட்டில் ஐக்கிய அரபு எமிரேகத்தில் அமைக்க உள்ளது.

❖ **எஃகு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடம்**

- எஃகு உற்பத்தியில் 2-து பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது. 1032.8 மில்லியன் டன்கள் உற்பத்தி கொண்ட சீனாவிற்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ஜம்மு-காஷ்மீர் தொகுதி மறுசீரமைப்புக் குழு**
  - ஜம்மு-காஷ்மீர் தொகுதி மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா தேசாய் தலைமையில், தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷீல் சந்திரா, மாநில தேர்தல் அதிகாரி கே.கே.சர்மா ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
- **சௌரி சௌரா சம்பவத்தின் 100 ஆண்டுகள்**
  - 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 அன்று உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூர் பகுதியில் நடைபெற்ற சௌரி சௌரா சம்பவத்தின் மீதான 100 ஆம் ஆண்டு நிறைவினை இந்திய அரசு அனுசரித்தது.
- **இந்தியாவில் முதன்முறையாக வாட்டர் டேக்ஸி சேவை**
  - இந்தியாவில் முதன்முறையாக வாட்டர் மும்பைநகருக்கும் 30 கிமீ தொலைவில் உள்ளநவி மும்பை பகுதிக்கும் இடையே நீர்வழிப்பாதையில் வாட்டர் டேக்ஸி சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- **குழந்தைகளுக்கும் தலைக்கவசம் கட்டாயம்**
  - இரு சக்கர வாகனங்களில் அழைத்துச் செல்லப்படும் 4 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கும் தலைக்கவசம் (ஹெல்மெட் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், வாகன ஓட்டுநர் பாதுகாப்பு பட்டை மூலம் குழந்தையை தனது உடலுடன் கட்டியிருப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- **காதி எம்போரியம்**
  - காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC) அதன் ஒரு நிறுவனமான மும்பை காதி & கிராமத் தொழில்கள் சங்கத்தின் (MKVIA) “காதி சான்றிதழை” ரத்து செய்துள்ளது.
  - போலியான/காதி அல்லாத பொருட்களின் விற்பனைக்கு எதிரான KVIC இன் “ஜீரோ-டாலரன்ஸ்” கொள்கைக்கு எதிரான போலி காதி தயாரிப்புகளை விற்கத் தொடங்கியதால், மும்பை காதி & கிராமத் தொழில்கள் சங்கத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
  - KVIC நிறுவப்பட்ட ஆண்டு : 1956

## திருவிழா

- **ஸ்பிடக் கஸ்டர் திருவிழா**
  - ஸ்பிடக் கஸ்டர் திருவிழா என்பது லே மற்றும் லடாக் போன்ற பிரதேசங்களில் கலாச்சாரம் மற்றும் மரபுப் பாரம்பரியத்தைக் கொண்டாடும் ஒரு வருடாந்திரக் கொண்டாட்டமாகும்.
- **கஞ்சோத் திருவிழா**
  - பதேர்வா மக்கள் பண்டைய காலத் திருவிழாவான கௌரி திரித்யா என்றும் அழைக்கப்படும் கஞ்சோத் திருவிழா ஜம்மு காஷ்மீரில் உள்ள செனாப் பள்ளத்தாக்கு பகுதியில் கொண்டாடப்படுகிறது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **மரு மஹோத்சவ்** .

➢ மரு மஹோத்சவ் திருவிழா (பாலைவன திருவிழா) பிப்ரவரி 13 முதல் 16 வரை ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள பொஹ்ரான் கிராமத்தில் நடைபெற்றது.

❖ **டோர்கியா திருவிழா**

➢ அருணாச்சலப் பிரதேசத்தின் மோன்பா பழங்குடியினச் சமூகத்தினரின் டோர்கியா என்ற திருவிழாவானது அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மடத்தில் கொண்டாடப்படுகிறது.

## பொருளாதாரம்

❖ **இந்தியப் பொருளாதார வளர்ச்சி 8.5%**

➢ 2022-23 ஆம் நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 8 முதல் 8.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக 2021-22 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ **2020-21 பொருளாதார வளர்ச்சியில் 6.6% பின்னடைவு**

➢ 2020-21- ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 6.6 சதவீதம் சரிவைக் கண்டதாக தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் (National Statistical Office) புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ **நதிகள் இணைப்புத் திட்டம் அறிவிப்பு**

➢ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தனது நிதிநிலை அறிக்கை உரையில் 5 நதிகள் இணைப்புத் திட்டம் குறித்து முன்மொழிந்தார்.

➢ இந்த இணைப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நதிகளானது; கோதாவரி - கிருஷ்ணா, கிருஷ்ணா – பெண்ணாறு மற்றும் பெண்ணாறு - காவிரி, தமன்கங்கா – பிஞ்சல் மற்றும் பார் – தபதி – நர்மதை ஆகியனவாகும்.

➢ இந்தியாவின் 4வது மிகப்பெரிய நதியான கிருஷ்ணா நதி, மகாராஷ்டிராவிலுள்ள மகாபலீஸ்வரத்தில் உருவாகுகிறது.

➢ இந்தியாவின் 3வது பெரிய நதியான கோதாவரி, நாசிக் என்னுமிடத்தில் உருவாகுகிறது.

## பட்ஜெட்

❖ **மத்திய நிதிநிலை அறிக்கை**

➢ 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

➢ இவரது நான்காவது பட்ஜெட் மற்றும் தொடர்ந்து இரண்டாம் முறையாக தாக்கல் செய்யப்படும் காகிதமில்லா பட்ஜெட் ஆகும்.

➢ பட்ஜெட் - ஷரத்து 112

➢ முன்னாள் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அதிகபட்சமாக எட்டு முறை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- ➢ இந்திய விடுதலைக்குப் பின்னர் முதல் நிதிநிலை அறிக்கையை நவம்பர் 26, 1947-ல் தமிழகத்தின் ஆர். கே. சண்முகம் செட்டியார் தாக்கல் செய்தார்.

❖ **PM கதிசக்தி**

- ➢ சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், துறைமுகங்கள், விரைவுப் போக்குவரத்து, நீர்வழிகள், போக்குவரத்து உள்கட்டமைப்பு ஆகியவை பிஎம் கதிசக்தியை இயக்கும் 7 என்ஜின்கள் ஆகும்

❖ **மாற்றுத்திறனாளிகளுக்கு வரி நிவாரணம்**

- ➢ பெற்றோர்கள் / காப்பாளர்களின் வாழ்க்கை காலத்தில் அதாவது பெற்றோர்கள் / காப்பாளர்கள் 60 வயதை எட்டிய போது, மாற்றுத்திறனாளிகளை சார்ந்திருப்போருக்கு காப்பீட்டு திட்டத்தில் இருந்து கிடைக்கும் வருடாந்திர தொகை அல்லது மொத்த தொகை அனுமதிக்கப்படும்.

❖ **எரிசக்தி மாற்றம் மற்றும் பருவநிலை செயல்திட்டம்:**

- ➢ 2030-க்குள் 280 ஜிகாவாட் சூரியசக்தி உற்பத்தி இலக்கை அடைய, உயர்திறன் கொண்ட சூரியசக்தி சாதனங்களை உற்பத்தி செய்ய, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக ரூ.19,500 கோடி கூடுதலாக ஒதுக்கப்படும்.

❖ **DESH-Stack இ-இணையதளம்**

- ➢ ஆன்லைன் பயிற்சி மூலம் மக்களின் திறனை மேம்படுத்த திறன் மற்றும் வாழ்வாதாரத்துக்கான டிஜிட்டல் அமைப்பு (DESH-Stack இ-இணையதளம்) தொடங்கப்படும்.

❖ **பர்வதமாலா**

- ➢ தேசிய ரோப்வே வளர்ச்சித் திட்டம் பர்வதமாலா பொதுத்துறை, தனியார் கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்படும்.

❖ **குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள்**

- ➢ உதயம், இ-ஷ்ரம், என்சிஎஸ் மற்றும் அசீம் (ASEEM) இணையதளங்கள் ஒன்றாக இணைக்கப்படும்.

❖ **மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் வரி விதிப்புக்கான திட்டம்**

- ➢ மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களுக்கான குறிப்பிட்ட வரிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிமாற்றத்திலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு 30 சதவீத விகிதத்தில் வரி விதிக்கப்படும்.

❖ பிரதமரின் இ-வித்யா திட்டத்தின் 'ஒரு வகுப்பு- ஒரு டி.வி சேனல்' 200 டி.வி சேனல்களாக விரிவுபடுத்தப்படும்.

❖ வடகிழக்கு மாநிலங்களில் சமூக வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமரின்-DevINE என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ மாநில அரசு ஊழியர்களுக்கும் வரி விலக்கு வரம்பு 10%-இல் இருந்து 14% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- ❖ கார்ப்பரேட் கூடுதல் கட்டணம் 12% இல் இருந்து 7% ஆக குறைக்கப்பட உள்ளது.
- ❖ தனியார் வருமான வரி விலக்கு உச்ச வரம்பில் (2.5 லட்சம்) மாற்றம் ஏதும் இல்லை.
- ❖ மாநிலங்களுக்கு வட்டியில்லா கடனாக ரூ.1 லட்சம் கோடி வழங்கப்படும்.இதனை திருப்பி செலுத்துவதற்கு 50 ஆண்டு கால அவகாசம் வழங்கப்படும்.
- ❖ பிரதமர் வீட்டு வசதி திட்டத்தின் மூலம் ரூ.48,000 கோடி செலவில் 80 லட்சம் வீடுகள் கட்டப்படும்.
- ❖ ரத்தினக்கற்களின் மீதான இறக்குமதி வரி 7.5% இல் இருந்து 5% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- ❖ **"க்விட் டொபாக்கோ" செயலி**
  - ➢ இதனை உலக சுகாதார அமைப்பு (WHO) தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து வடிவங்களிலும் புகையிலை பயன்பாட்டை கைவிட இந்த செயலி மக்களுக்கு உதவுகிறது.
- ❖ **நீலப் பொருளாதார ஒப்பந்தம்**
  - ➢ நீலப் பொருளாதாரம், கடல்சார் நிர்வாகம் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் 'ஐரோப்பிய யூனியன்-இந்தியா ஒத்துழைப்பு: 2025-ஆம் ஆண்டுக்கான வழிகாட்டி' என்ற ஒப்பந்தம் கையொப்பமானது.
  - ➢ கடல்வழி வர்த்தகம், கப்பல்கட்டும் தொழில், மீன்பிடித்தொழில், கடல்சார் தொழில்நுட்பம், ஆராய்ச்சி, கடல் கண்காணிப்பு, கடல் பல்லுயிர்ப் பெருக்கம், கடற்கரை கண்காணிப்பு-மேலாண்மை, கடல்சார் பசுமை சுற்றுலா, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, கடல்சார் கொள்கை குறித்த திட்டமிடல் உள்ளிட்டவற்றில் ஒத்துழைத்து பணியாற்ற அந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.
- ❖ இந்தியாவின் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை (UPI) முறையை ஏற்கும் முதல் நாடாக நேபாளம் உள்ளது.
- ❖ **ஆளில்லா விமானங்கள் – இஸ்ரேல்**
  - ➢ பொதுப் போக்குவரத்து பகுதியில் ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு தனியார் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிய முதல் நாடாகும்.

## சுற்றுச்சூழல்

- ❖ **இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா**
  - ➢ இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா மத்திய பிரதேசத்தின் ஜபல்பூரில் லாம்ஹெட்டாவில் கட்டப்பட்டுள்ளது.
  - ➢ லாம்ஹெட்டா, யுனெஸ்கோவின் புவிசார் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ **இந்தியாவில் உள்ள ராம்சார் தளங்கள்**
  - ➢ குஜராத் மாநிலத்தில் ஜாம்நகரில் உள்ள, கிஜாடியா பறவைகள் சரணாலயம், உத்தர பிரதேசத்தில் உள்ள பக்கீரா வனவிலங்கு சரணாலயம் ஆகியவை இந்தியாவில் உள்ள



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

ராம்சார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியாவில் உள்ள ராம்சார் சரணாலயம் மொத்தம் 49 ஆக அதிகரித்துள்ளது.

❖ **ஆரவல்லி பல்லுயிர் பூங்கா**

➢ இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) ஆரவல்லி பல்லுயிர் பூங்காவை இந்தியாவின் முதல் “மற்ற பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள்” (OECM) தளமாக அறிவித்தது.

❖ **ஹைட்ரஜன் ஆலை**

➢ இந்தியாவின் முதல் உயிர்பொருள் அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை மத்தியப் பிரதேசத்தின் கந்த்வா மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.

❖ **முதல் பல்லுயிர் பூங்கா**

➢ அழிந்து வரும் இமாலய மூலிகைகளைப் பாதுகாப்பதற்காக இமாச்சலப் பிரதேசத்தின் முதலாம் பல்லுயிர் பூங்கா மண்டியில் உள்ள புலா பள்ளத்தாக்கில் அமைக்கப்பட உள்ளது.

❖ **நிலையான நகரங்கள் இந்தியா திட்டம்**

➢ உலகப் பொருளாதார மன்றம் (WEF) மற்றும் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் (NIUA) இணைந்து "நிலையான நகரங்கள் இந்தியா திட்டம்" புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.

➢ துவக்கம் : ஜனவரி 1971, தலைமையகம்: கோலோக்னி

❖ **இ-வேஸ்ட் சுற்றுச்சூழல் பூங்கா**

➢ இந்தியாவின் முதல் இ-வேஸ்ட் சுற்றுச்சூழல் பூங்காவிற்கு டெல்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

➢ டில்லியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் மின்னணு கழிவுகளைக் கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த பூங்கா கட்டப்பட உள்ளது.

❖ **“கோபர் தான்“ உயிரி இயற்கை எரிவாயு ஆலை**

➢ மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் ரூ.150 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 550 டன் திறன் கொண்ட “கோபர் தான்” உயிரி இயற்கை எரிவாயு ஆலையை காணொலி வாயிலாக பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

❖ **சராஸ்கா புலிகள் சரணாலயம்**

➢ ராஜஸ்தானின் சராஸ்கா புலிகள் சரணாலயத்தில் புலிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

❖ **புதிய சிலந்தி மற்றும் மரவட்டை இனங்கள்**

➢ மேற்குத்தொடர்ச்சி மலைகளிலுள்ள வயநாடு வனவிலங்குச் சரணாலயத்தின் தோல்பெட்டி வனப் பிரிவின் ஈர இலையுதிர் காடுகளில் இருந்து கார்ஹோட்டஸ் தோல்பெட்டியென்சிஸ் (Carrhotus tholpettyensis) எனும் சிலந்தி இனம் கண்டறியப்பட்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- புதிய ஆராய்ச்சியாளர்கள் கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் டெலார்த்ரம் அனோமலான்ஸ் (Delarthrum anomalans) ஒரு புதிய மர வட்டை இனத்தினையும் கண்டறிந்துள்ளனர்.

❖ **வனப்பரப்பு உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது**

- கடந்த பத்தாண்டுகளில் இந்தியா தனது வனப் பரப்பை அதிகரித்து, 2010-2020 ஆம் ஆண்டு முதல் வனப்பகுதியில் சராசரி வருடாந்திர நிகர லாபத்தில் உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது என்று பொருளாதார விவகாரங்கள் துறை (DEA) ஆண்டு பொருளாதார ஆய்வில் தெரிவித்துள்ளது.

❖ **ஆரவல்லி உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கப் பூங்கா**

- ஹரியானாவின் குருகிராமில் உள்ள ஆரவல்லி உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கப் பூங்காவை இந்தியாவின் முதலாவது “பரப்பளவு அடிப்படையிலான இதர செயல் திறன் மிக்க நடவடிக்கை” (other effective area-based conservation measures) தளமாக சர்வதேச இயற்கை வளங்காப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

❖ **வெண்முக மந்தி**

- சமீபத்தில் அறிவியலாளர்கள் அருணாச்சலப் பிரதேசத்தில் வெண்முக மந்திகளைக் கண்டுபிடித்தனர்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **ஹைட்ரஜனில் இயங்கும் பறக்கும் படகு**

- உலகில் முதலில் ஹைட்ரஜனில் இயங்கும் தி ஜெட் எனும் பறக்கும் படகை துபாயில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இதனை துபாயின் தி ஜெட் ஸிரோ எமிஸ்ஸன் நிறுவனம் தயாரித்துள்ளது.

❖ **EOS-04 செயற்கைக்கோள்**

- EOS-04 செயற்கைக்கோள் பிஎஸ்எல்வி-சி52 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து இந்த ஏவுகணை செலுத்தப்பட்டது.
- துவக்கம் : 7 ஏப்ரல் 1948, தலைமையகம்: ஜெனீவா, சுவிட்சர்லாந்து.

❖ **‘கிசான்’ மொபைல் செயலி**

- 'கிசான்' மொபைல் செயலியை , உத்தரகாண்டில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, ரூர்க்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- விவசாயிகளுக்கு வேளாண் வானிலை சேவைகளை வழங்கும் இந்த செயலி ‘கிராமின் க்ரிஷி மௌசம் சேவா’ திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ **இந்தியாவில் சக்தி வாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்**

- இந்திய அறிவியல் கழகம் (IISc) இந்தியாவில் உள்ள மிக சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களில் ஒன்றான பரம் பிரவேகாவை தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் திட்டத்தின் (NSM) கீழ் நிறுவியுள்ளது.

- இதன் மொத்த சூப்பர் கம்ப்யூட்டிங் திறன் 3.3 பெட்டாஃப்ளாப்ஸ் (1 பெட்டாஃப்ளாப் ஒரு குவாட்ரில்லியன்) ஆகும். இது மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையத்தால் (C-DAC) வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **மங்கத்ராம் சர்மா**
  - தமிழக அரசின், அரசு திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் தொடர்பு அதிகாரியாக மங்கத்ராம் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.
- **பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் தலைவர்**
  - பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் தலைவராக ஜி ஏ வி ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **லதா மங்கேஷ்கர்**
  - பழம்பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் காலமானார். இவர் இந்தியாவின் நைட்டிங்கேல் மற்றும் இந்தியாவின் இசைக்குயில் என்று அழைக்கப்படுகிறார்.
  - 2001-ல் பாரத ரத்னா மற்றும் 1989 ஆம் ஆண்டில், தாதா சாஹேப் பால்கே விருது பெற்றுள்ளார்.
- **கர்நாடகத்தின் கபீர்**
  - 'கர்நாடகத்தின் கபீர்' என்று அழைக்கப்படும் இப்ராஹிம் சுதார் காலமானார். இவருக்கு 2018-ல் - ல் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது
- **NCERT யின் புதிய இயக்குநர்**
  - தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் புதிய இயக்குநராக பேராசிரியர் தினேஷ் பிரசாத் சக்லானி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) த்தின் புதிய இயக்குநர்**
  - டாக்டர் உன்னிகிருஷ்ணன் நாயர் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) த்தின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டார்.
  - 21 நவம்பர் 1963-ல் நிறுவப்பட்டது.

## திட்டம்

- **பரே ஷிக்ஷாலயா**
  - மேற்கு வங்கத்தில் திறந்தவெளி வகுப்பறைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு 'பரே சிக்ஷாலயா' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- **'ஜிவா' திட்டம்**
  - இத்திட்டம் நபார்டு வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.· இது வேளாண்மை சூழியல் சார்ந்த திட்டமாகும்.
- **ஸ்மைல் திட்டம்**
  - இந்த திட்டம் திருநங்கைகள் மற்றும் பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபடும் மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **சௌபாக்யா திட்டம்**
  - இத்திட்டத்தின் கீழ், வீடுகளுக்கு தனித்தனியே சூரியசக்தி அடிப்படையிலான மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
  - இதில் அதிக வீடுகளுக்கு சூரியசக்தி மின்சாரம் வழங்கி ராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது.
- **குன்ஸ்நியோம் திட்டம்**
  - லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில் (LAHDC), மாற்றுத்திறனாளிகளுக்கான குன்ஸ்நியோம் என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - குன்ஸ்நியோம் என்பதற்கு "அனைவருக்கும் சமம், அனைவருக்கும் நியாயமானது" என்பது பொருள்.
- **SeHAT திட்டம்**
  - பாதுகாப்புத் துறை அமைச்சகமானது, 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில், அனைத்து ஆயுதப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இணைய வழியிலான சுகாதார உதவிகள் மற்றும் தொலைத் தொடர்பு கலந்தாய்வு சேவைகளை வழங்குதல் (SeHAT - Social Endeavor for Health and Telemedicine) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
  - மேலும் கூடுதலாக, SeHAT திட்டத்தின் கீழ் ஆலோசனை பெற விரும்பும் நோயாளிகளுக்கு மருந்துகளை வீட்டிற்கே சென்று விநியோகம் செய்தல் அல்லது மருந்துகளை சுயமாக எடுத்துச் செல்லுதல் போன்ற வசதிகள் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 முதல் தொடங்கப்பட்டு உள்ளன.

## மாநாடுகள்

- **இந்தியாவில் உள்ள அருங்காட்சியகம் மறுவடிவமைப்பு உலகளாவிய உச்சி மாநாடு**
  - இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களை மறுவடிவமைப்பது குறித்த உலகளாவிய உச்சி மாநாட்டினைக் கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்ய உள்ளது. இந்த மாநாடானது இது போன்ற முதல் வகையிலான உச்சி மாநாடு ஆகும்.

## பாதுகாப்பு

- **ஆபரேஷன் AAHT**
  - ஆள் கடத்தலை தடுக்க இந்திய ரயில்வே பாதுகாப்பு படை நாடு முழுவதும் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு 'ஆபரேஷன் AAHT' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- **ஆபரேஷன் கங்கா**
  - உக்ரைனில் இருக்கும் இந்தியர்களை மீட்பதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்த நடவடிக்கைக்கு "ஆபரேஷன் கங்கா " எனப் பெயரிடப்பட்டுள்ளது.
  - வந்தே பாரத் மிஷன்- கோவிட் பெருந்தொற்று காலகட்டத்தில் வெவ்வேறு நாடுகளில் உள்ள இந்தியர்களை இந்தியாவிற்கு அழைத்து வரும் திட்டமாகும்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **'ஆபரேஷன் காத்மா'**
  - பத்திரிகையாளர்கள் ஆர்.சி.கஞ்சூ மற்றும் அஷ்வினி பட்நாகர் எழுதிய 'ஆபரேஷன் காத்மா' புத்தகமானது, ஜம்மு & காஷ்மீர் விடுதலை முன்னணியின் (JKLF) தொடர்பான ஜம்மு & காஷ்மீர் காவல்துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவின் நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

## கூட்டுப்பயிற்சி

- மிலன்- இந்தியா நடத்தும் கடற்படை கூட்டுப் பயிற்சி

| பெயர் | நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| மிலன் கூட்டுப் பயிற்சி | இந்தியா + 40-க்கும் மேற்பட்ட நாடுகள் | கடற்படை | விசாகப்பட்டினம் |
| தர்ம கார்டியன் பயிற்சி | இந்தியா மற்றும் ஜப்பான் | ராணுவப் பயிற்சி | கர்நாடகா (பெலகாவி) |

## விருதுகள்

- **யுவ புரஸ்கார் விருது**
  - 2021-ம் ஆண்டிற்கான யுவ புரஸ்கார் விருது (தமிழ்) ராஜபாளையத்தைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் நட்சத்திரவாசிகள் எனும் நாவலுக்காக கார்த்திக் சுப்பிரமணியனுக்கு வழங்கப்படுகிறது.
- **லௌரியஸ் விருது**
  - சிறந்த திருப்புனை பிரிவுக்கு இந்தியாவின் நீரஜ் சோப்ரா பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.
- **குடியரசுத் தலைவர் வண்ணங்கள் (நிஷான்) விருது**
  - **குடியரசுத் தலைவர்** வண்ணங்கள் (நிஷான்) விருது இராணுவப் பிரிவுக்கு வழங்கப்படும் உயரிய விருது ஆகும்.
  - இது போரின் போதும், அமைதியான காலத்திலும், தேசத்திற்கு சிறப்பாக சேவையாற்றிய இராணுவப் பிரிவுக்கு வழங்கப்படும்.
- **சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார் விருது**
  - சிறுகதை எழுத்தாளர் கார்த்திக் பாலசுப்ரமணியனுக்கு 2021ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார் விருது 'நட்சத்திர வாசிகள்' எனும் அவரது நாவலுக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **உலக விளையாட்டு வீரர் விருது**
  - 2021 ஆம் ஆண்டிற்கான உலக விளையாட்டு வீரர் விருது, இந்திய ஹாக்கி அணி வீரர் பி.ஆர்.ஸ்ரீஜேஷ் க்கு வழங்கப்பட்டது.
  - 2019-ம் ஆண்டு ராணி ராம்பாலுக்கு பிறகு இந்த விருதை வென்ற இரண்டாவது இந்தியர் ஆவார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ஐசிசி ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட் விருது 2021**
  - நியூசிலாந்தின் டேரில் மிட்செல் ஐசிசி ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட் விருது 2021ற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- **U19 கிரிக்கெட் உலகக் கோப்பை 2022**
  - 2022 ஆம் ஆண்டு U19 கிரிக்கெட் உலக கோப்பை இறுதி போட்டியில், இங்கிலாந்தை வீழ்த்தி ஐந்தாவது முறையாக சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.
- **குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் - 2022**
  - 2022 ஆம் ஆண்டிற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இதில் 16 தங்கம் உட்பட 37 பதக்கங்கள் உள்பட நார்வே முதலிடம் பிடித்துள்ளது.
- **1000-ஆவது ஒருநாள் ஆட்டம்: இந்தியா அபார வெற்றி**
  - அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற, தனது 1000-ஆவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கு இந்திய தீவுகளை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றியை பெற்றுள்ளது.
- **ஒலிம்பிக் போட்டி - 2028**
  - 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளானது லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற உள்ளது.
  - 2024 ஒலிம்பிக் போட்டி - பாரீஸ்
  - 2022 ஒலிம்பிக் போட்டி - டோக்கியோ

| தாதாசாகேப் பால்கே விருதுகள் - 2021 | |
|---|---|
| சிறந்த திரைப்பட விருது | புஷ்பா: தி ரைஸ் |
| சிறந்த நடிகருக்கான விருது: | ரன்வீர் சிங் |
| எ நேஷன் டு ப்ரொடெக்ட் | பிரியம் காந்தி மோடி |

## புள்ளிவிவரம்

- **சர்வதேச அறிவுசார் சொத்துரிமைக் குறியீடு 2022**
  - இந்தக் குறியீட்டை அமெரிக்க வர்த்தக சபையின் உலகளாவிய கண்டுபிடிப்பு கொள்கை மையம் வெளியிடுகிறது.
  - இதில் 55 நாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இதில் இந்தியா 43-வது இடத்தைப் பிடித்துள்ளது.
  - சர்வதேச அறிவுசார் சொத்துரிமைக் குறியீட்டில் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் முறையே முதல் ஐந்து இடங்களை பிடித்துள்ளன.

## புத்தகம்

| புத்தகம் | எழுதியவர் | வெளியீட்டது |
|---|---|---|
| அடல் பிஹாரி வாஜ்பாய் | சாகரிகா கோஸ் | |
| பியர்லெஸ் கவர்னன்ஸ் | கிரண் பேடி | |
| கோல்டன் பாய் நீரஜ் சோப்ரா | நவ்தீப் சிங் கில் | |
| அடுத்த தொற்றுநோயைத் தடுப்பது எப்படி | பில் கேட்ஸ் | |



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

| | | |
|---|---|---|
| Humane: How the United States Abandoned Peace and Reinvented War | சாமுவேல் மொய்ன் | |
| ‘தி கிரேட் டெக் கேம்’ | அனிருத் சூரி | |
| “The $10 Trillion Dream” | சுபாஷ் சந்திர கார்க் (இந்தியாவின் முன்னாள் நிதிச் செயலாளர்) | |
| “A Little Book of India: Celebrating 75 Years of Independence” | ரஸ்கின் பாண்ட் | |
| நானும் நீதிபதி ஆனேன் | நீதிபதி சந்துரு (முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி) குறிப்பு: ஜெயிபீம் | |
| காஞ்சிபுரத்தில் உள்ள உள்நாட்டு கட்டிடக்கலை வரலாற்றுப் பார்வைகள் | ஜே.சுமதி | இந்தியவியல் ஆராய்ச்சி நிறுவனம் |
| காவேரிப்பாக்கம் - வரலாறு மற்றும் கலை மரபுகள் | வி.என்.ஸ்ரீனிவாச தேசிகன் | இந்தியவியல் ஆராய்ச்சி நிறுவனம் |

## முக்கிய தினம்

- பிப்ரவரி 01 - இந்திய கடலோர காவல்படை தினம்
- பிப்ரவரி 02 - உலக சதுப்புநில தினம்
  - 1972-ம் ஆண்டு பிப்ரவரி 02 அன்று ராம்சார் என்னும் ஈரான் நாட்டின் நகரத்தில் சதுப்புநில மாநாடு நடைபெற்றது.
  - உலகில் உள்ள மொத்த நிலத்தில் 6% சதுப்பு நிலங்கள் உள்ளன.
  - 2022-ம் ஆண்டிற்கான கருப்பொருள்: "மக்கள் மற்றும் இயற்கைக்கான ஈரநில நடவடிக்கை"
- பிப்ரவரி 01 முதல் 07 வரை - உலக சமய நல்லிணக்க வாரம்
- பிப்ரவரி 4 - உலக புற்றுநோய் தினம்
- பிப்ரவரி 6 - சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைவு எதிர்ப்பு தினம்
- பிப்ரவரி 14 முதல் 18 வரை - ரிசர்வ் வங்கி நிதி கல்வியறிவு வாரம்
  - 2016 ஆம் ஆண்டு முதல் ரிசர்வ் வங்கி கடைபிடித்து வருகிறது.
- பிப்ரவரி 10 - உலக பருப்பு தினம்
- பிப்ரவரி 11 - அறிவியலில் பெண்கள் மற்றும் பெண்களுக்கான சர்வதேச தினம்
- பிப்ரவரி 11 - உலக யுனானி தினம்
- பிப்ரவரி 13 - இந்திய தேசிய மகளிர் தினம்
  - சரோஜினி நாயுடு அவர்களின் பிறந்த தினம். ‘இந்தியாவின் நைட்டிங்கேல்’ அல்லது ‘பாரத் கோகிலா’ என்ற புனைப் பெயர்களால் அழைக்கப்படுகிறார்.
- பிப்ரவரி 15 - சர்வதேச குழந்தை பருவ புற்றுநோய் தினம்
- பிப்ரவரி 24 - மத்திய கலால் தினம்



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- 1944 அன்று முதல் மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டத்தின் சட்டத்தை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.

❖ பிப்ரவரி 27 - உலக NGO தினம்

❖ பிப்ரவரி 27 - தேசிய புரத தினம்

- இந்த தினத்தின் நோக்கம் புரதச் சத்து குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகும்.

❖ பிப்ரவரி 28 - இந்தியாவில் தேசிய அறிவியல் தினம்

❖ பிப்ரவரி 27 - தேசிய போலியோ நோய்த்தடுப்பு நாள்

- இந்தியா 2012 ஆம் ஆண்டு போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது.
- தெற்காசிய பிராந்தியம் முழுவதும் 2013 ஆம் ஆண்டில் போலியோ இல்லாததாக அறிவிக்கப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com